பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 39
கதிர் : 226
செவ்வாய்க்கிழமை
9 ஜூலை 2024

முச்சந்தி முரளி



"சாது மட்டுமில்ல
சனங்கள் திரண்டாலும்
(குழைக்) காடு
தாங்காது
கண்டியளோ"

## நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிப்பு
## மணிக்கணக்காக வீதி மறியல்
## விசேட அதிரடிப்படையும் களத்தில்

### மருத்துவ மாபியாக்களுக்கு எதிராக



# சாவகச்சேரியில் மக்கள் புரட்சி
# மருத்துவர் கொழும்பு புறப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 9

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் பதவியிலிருந்து மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவை இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மருத்துவ மாபியாக் களைக் கண்டித்தும், மேற்படி மருத்துவ மனை முன்பாக நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று மணிக்கணக்காக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் விசாரணையை எதிர்கொள்வதற்காக நேற்று மதியமளவில் மருத்துவர் அர்ச்சுனா, சாவகச்சேரி மருத்து வமனையில் இருந்து கொழும்புக்கு புறப்பட டுச்சென்றார்.

11

## மருத்துவரை வெளியேற்ற தண்ணீர் துண்டிப்பு!

## மக்கள் எதிர்பார்ப்பை நிவர்த்திக்க நடவடிக்கை!

அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

விரிவுகள் :- பக். 11

## மருத்துவ அதிகாரிகளின் பணிப்புறக்கணிப்பு முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அதிகாரியாகச் செயற்பட்ட அர்ச்சுனா கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த நான்கு நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவந்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் போராட் டம் முடிவுக்கு வந்துள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகராகச் செயற்பட்ட

11

### ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுக

## அடிப்படை உரிமை மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஜூலை 9

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் சட்டவியாக்கியானம் வழங்கும்வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு

11

## சீனாவின் பொருத்துவீடு எங்களுக்கு வேண்டாம்

### கடற்றொழிலாளர் கிராமிய கூட்டுறவு அமைப்பினர் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜூலை 9

சீன அரசின் பொருத்து வீட்டுத் திட் டம் வடக்கு - கிழக்கு மீனவர்களுக்கு வேண்டாம் எனவும் நிரந்தர வீட்டுத் திட்டத்தை மீனவர்களுக்கு வழங்கு மாறும் சுழிபுரம் அலை

11

## போராட்டத்தில் 'கிளினிக்'அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

சாவகச்சேரி ஆதார மருத்துவம னையில், இடம்பெற்றுவரும் மருத் துவ மோசடிகளுக்கு எதிராக நோயாளிகள் தங்களின் கிளினிக் அட்டைகளுடன் நேற்றுப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் இன்று வழக்கம்போல் இயங்குமாம்!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 9
அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் இன்று செவ்வாய்க்கிழமை வழமைபோன்று நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
நாடளாவிய ரீதியில் 200 இற்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் நேற்றும், இன்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் கலந்துகொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் கல்வி அமைச்சு நேற்று அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.
அந்த அறிவித்தலில் அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் இன்று வழமைபோன்று நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## சுகாதாரத்துடன் செயற்பட்டால் உணவுத் தொழிலில் வெல்லலாம்!

*பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவுரை*

கிளிநொச்சி, ஜூலை 9
உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களும், உணவு உற்பத்தி மற்றும் பரிமாறலில் ஈடுபடுவோரும், சுகாதாரமானதும் தரமானதுமானதும் உணவுகளை வழங்குவதன் ஊடாகவே தொழிலில் வெற்றிபெறமுடியும் என்று சுட்டிக்காட்டியுள்ளார் பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்.
பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிறுவன ஊழியர்களுக்கான உணவுப் பாதுகாப்பு கல்வியறிவூட்டல் மற்றும் மருத்துவச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
உணவுத் தொழில் நேரடியாக மனித உயிரோடு தொடர்புபட்டது. அது போஷாக்கானதாகவும் உடலுக்கு ஊறு விளைவிக்காததாகவும் பசிப்பிணியைப் போக்கி ஆத்ம திருப்தியைப் பெறக்கூடிய தாகவும் அமையவேண்டும்.
தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவதோடு அனைத்து ஊழியர்களும் மருத்துவச் சான்றிதழையும் கைவசம் வைத்திருக்கவேண்டும்.
பொதுமக்களுக்கான தரமான சுகாதாரமான உணவு வழங்கலை நோக்கமாகக் கொண்டு செயற்படும்போது ஒவ்வொரு உணவு கையாளும் நிறுவனங்களும் மக்களால் விரும்பப்படும் - என்றும் அவர் தெரிவித்தார். (எ-25-9)



## மாடுகள் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் மக்களால் மடக்கிப் பிடிப்பு!

வவுனியா, ஜூலை 9
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் மாடு கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர், அந்தப் பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. .
வவுனியா, பத்தினியார் - மகிழங்குளம் பகுதியில் காணி ஒன்றில் கட்டப்பட்டிருந்த மாட்டை சந்தேகநபர்கள் இருவரும் கடத்திச்சென்றவேளை, இளைஞர்கள் சிலர் அவர்களை மடக்கிப் பிடித்து, கட்டிவைத்து நையப்புடைத்தனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.
இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபர்களைக் கைதுசெய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22,25,110,18)

## புலமைப்பரிசில் வழங்கல் மாத இறுதியில் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 9
பாடசாலை மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
புலமைப்பரிசில் பட்டியலைத் தயாரிக்குமாறு சகல பிரதேச செயலர்களுக்கும், வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
புலமைப்பரிசிலுக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் விவரங்கள் ஜனாதிபதி நிதிய முகநூலில் வெளியிடப்படும்.
இந்தப் புலமைப்பரிசிலுக்கு 60 கல்வி வலயங்களிலிருந்தும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் 6 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.
தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் இரு வருடங்களுக்கு புலமைப்பரிசில் பணம் வழங்கப்படும்.
தரம் ஒன்று முதல் பதினொன்று வரையான மாணவர்களுக்கு மாதம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்துக்கு 36 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதைவிட விசேட திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-6)

## 2,888 கிலோ பீடி இலையுடன் மன்னாரில் மூவர் கைது!

மன்னார், ஜூலை 9
பீடி இலைகள் கொண்ட ஒரு தொகுதி மூடைகள் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நேற்றுத் திங்கட்கிழமை காலை வங்காலை கடற்கரையில் இருந்து பீடி இலைகள் கொண்ட பொதிகள் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டபோது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
இரகசியத் தகவலுக்கமைய, சம்பவ இடத்துக்கு விரைந்த பிரிவினர் 80 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 888 கிலோ பீடி இலைகளை மீட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களும் வங்காலை பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ப-56)



## பாவனைக்கு ஒவ்வாத மாட்டிறைச்சி ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 9
பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சியினை விற்பனைக்குக் கொண்டு சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெடுந்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். கிடைத்த தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், 14.5 கிலோ கிராம் மாட்டிறைச்சியைக் கைப்பற்றியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-125)




## குடிதண்ணீர் விநியோகம் இம்மாத நடுப்பகுதியில்!

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தின் முதலாம் கட்டமாக, இந்தமாத நடுப்பகுதியில் பளை பிரதேசத்துக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொறுப்பு வாய்ந்த செயற்றிட்ட அதிகாரி தெரிவித்தார்.
எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இதை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி செயலகம் தகவல் ஒன்றை வழங்கியுள்ளது. குறிக்கப்பட்ட காலப்பகுதியில் பளை நோக்கி தண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது.
நீர் விநியோகத்துக்காக, தாழையடியிலிருந்து நீர் சுத்திகரிக்கப்பட்டு கொண்டுவரப்படவுள்ளது. அதேவேளை, சுமார் 266 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிளிநொச்சி, யாழ்ப்பாணம் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ப-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக சீரமைப்பு முதலீடு; நிதியைக் குறைத்தது சீனா!



கொழும்பு, ஜூலை 9

**கொழும்புத் துறைமுக விஸ்தரிப்புக்கான முதலீட்டுத் தொகையை சீன வர்த்தகத்துறைமுக நிறுவனம் குறைத்துள்ளது.**

கொழும்புத் துறைமுகத்தில் எந்தவித விஸ்தரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது என நிபந்தனை விதிக்கப்பட்டமையே, சீன வர்த்தக துறைமுக நிறுவனம் தனது முதலீட்டுத்தொகையை 60 மில்லியனாக குறைத்தமைக்குக் காரணம் என துறைமுக அதிகார சபைத் தலைவர் கீத் பேர்னாட் தெரிவித்துள்ளார்.

துறைமுக விஸ்தரிப்பு நடவடிக்கையில் முதலீடு செய்ய முன்வந்த சீன வர்த்தக துறைமுக நிறுவனம், தனது முதலீட்டுத் தொகையை 30 மில்லியனால் குறைத்துள்ளது.

ஆரம்பத்தில் 90 மில்லியன் டொலரை முதலீடு செய்வதற்குத் தீர்மானித்திருந்த இந்த நிறுவனம், தற்போது 60 மில்லியன் டொலரை மட்டுமே முதலீடு செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவிக்காலத்தில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கணிசமான வரி விலக்கு அளித்திருந்தார். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது, டிசெம்பர் 2024 வரையான காலப்பகுதிக்கு சுங்க வரி விலக்கு மட்டுமே அளித்துள்ளார். சீன வர்த்தக துறைமுக நிறுவனம் தனது முதலீட்டுத் தொகையை குறைத்தமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ப-6)

## 822 பேர் கைது

கொழும்பு, ஜூலை 9

நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவுடன் முடிந்த 24 மணிநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்புகளில் போதைப்பொருள் குற்றங்களின் அடிப்படையில் 822 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 811 ஆண்களும் 11 பெண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களில் 32 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 12 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (எ-இ)

## வாகனத்தரிப்பிடத்துக்கு ரூ.513 மில்லியன் செலவு

### தேசிய கணக்காய்வு நிறுவனம் கண்டுபிடிப்பு

கண்டி மாநகரசபை அமைத்த வாகனத்தரிப்பிடத்துக்கு, 513 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாகவும், இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட போது, ஒரு நிறுவனத்துக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தேசிய கணக்காய்வு நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இந்த வாகனத்தரிப்பிடத்தின் மேல் பகுதியில் 15 வீடுகளும் நூறு வர்த்தக நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்த 513 மில்லியன் நிதி உலகவங்கியால் ஒதுக்கப்பட்ட நிதி என்பது குறிப்பிடத்தக்கது. (ப-6)

## சுற்றிவளைப்பில் 13 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 9

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்த நபர்களுக்கு எதிராக மானிப்பாய் பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ப-125)

## மழை தொடரும்

கொழும்பு, ஜூலை 9

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் தற்போது நிலவும் மழையுடனான நிலைமை எதிர்வரும் நாள்களிலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்று இடையிடையே மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

## கட்டுநாயக்கவில் சிக்கிய ஆபிரிக்க காட்டுப் பூனை!

கொழும்பு, ஜூலை 9

அனுமதியின்றி இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஆபிரிக்க காட்டுப் பூனையொன்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கண்டியைச் சேர்ந்த ஒருவரால் இந்தக் காட்டுப் பூனை கொண்டுவரப்பட்டுள்ளது. இது இலங்கையில் காணப்படும் சிறுத்தை இனத்தை ஒத்ததாகக் கருதப்படுகிறது.

இந்தக் காட்டுப்பூனை ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் செல்லப்பிராணியாக வளர்க்கப்படுவதாகவும், சர்வதேச ரீதியில் இவற்றுக்கு அதிக கேள்வி நிலவுகின்றது என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை சுங்கத்தின் பல்லுயிர், கலாசார மற்றும் தேசியப் பாதுகாப்பு பிரிவு மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. விசாரணைகள் நிறைவடைந்த பின் காட்டுப் பூனை தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலையில் சேர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-25)

## புதினம் தெரியுமோ?

முட்டையில மயிர் பிடுங்கிறதில எங்கட ஆக்களை ஆராலையும் வெல்லேலாது. அப்பிடி இல்லாத பொல்லாத காரணங்களைச் சொல்லி மேலிடத்துக்கு இரவுபகலாப் பெட்டிசத்துக்கு மேல பெட்டிசமா அடிச்சு ஒருமாதிரி, சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பா வந்த டாக்குத்தரை கலைச்சுப் போட்டினம். பேச்சுவார்த்தைக்கு எண்டுதான் அவர் போனாலும், திரும்ப இஞ்ச ஆளை வரவிடக்கூடாது எண்டதில கனபேர் கண்ணும் கருத்துமா இருக்கினம். இத்தனைக்கும் அந்த டாக்குத்தர் செய்தது என்ன? ஒழுங்கில்லாமல் கிடந்த ஆஸ்பத்திரியில இருக்கிற வளத்தை வைச்சாவது இயங்கப்பண்ணுவம் எண்டு பொதுநலமா வெளிக்கிட்டதுதான். இந்தப் பொதுநலம் அங்க வேலையில 'ஐஸ்' அடிச்சுக்கொண்டிருந்தவைக்கு ஆப்படிச்சிட்டுது. அந்தக் கடுப்பிலதான் சாவகச்சேரி ஆஸ்பத்திரியை நல்ல மாதிரிக் கொண்டுவந்திடக்கூடாது எண்டதுக்காகவே கனக்க முட்டுக்கட்டையள் போடத்தொடங்கிட்டினம். உண்மையா வேலை செய்ய வெளிக்கிட்ட ஆருக்கும், இப்பிடி தேவையில்லாமல் முட்டுக்கட்டை போட்டால் கோபம் வரத்தானே செய்யும்? அந்தக் கோபத்தை புதுசா வந்த டாக்குத்தர் பேஸ்புக் வீடியோவில வெளிக்காட்டி, எங்களைச் சுத்தி ஆரெல்லாம் டாக்குத்தர் எண்ட பேரில மாபியா மாதிரி காசை மட்டும் குறியா வைச்சுக்கொண்டு அரசாங்க ஆஸ்பத்திரியளை நாசமாக்குகினம் எண்டு போட்டுடைக்க, குற்றம் செய்த எல்லாருக்குமே குலை நடுங்கிப் போட்டுது.

இப்பிடிப்பட்ட நிலையிலதான் டாக்குத்தர் அர்ச்சுனா ஒருசில பிழையளையும் விட்டிட்டார். தான் செய்யிறதெல்லாம் சனத்தின்ர நன்மைக்குத்தானே எண்ட நினைப்பில, மற்ற டாக்குத்தர்மாருக்கு இடமாற்றம் குடுத்தார், பெரியாஸ்பத்திரி டாக்குத்தர்மாரோட போன்பண்ணி அவையைக் கோபப்படுத்தினதோட அதை ரெக்கோர்ட் பண்ணி மீடியாக்களுக்கும் குடுத்திட்டார். இதெல்லாம் அவரின்ர எதிராளியளுக்கு சாதகமாப் போட்டுது. ஆனாலும் சினிமாப் படங்களில வாற மாதிரி அர்ச்சுனா டாக்குத்தரின்ர வீடியோக்களைப் பாத்திட்டு, சனம் தன்ரபாட்டில அவருக்கு சப்போர்ட் பண்ண வருமெண்டு அவை ஒருத்தருமே எதிர்பாக்கேலை. இல்லாட்டி முந்தநாள் இரவே அவரைத் தூக்கியிருப்பினம். சனம் கொந்தளிச்சு றோட்டுக்கு வந்ததாலதான் இப்ப அவரைப் பேச்சுவார்த்தைக்கு கொழும்புக்கு கூட்டிக் கொண்டு போறம் எண்டு, பிரச்சினையள் வராதபடி கொண்டுபோனவை.

இதுக்குள்ள, டாக்குத்தர் அர்ச்சுனாவுக்கு எதிரா சாவகச்சேரி ஆஸ்பத்திரியின்ர நோயாளர் நலன்புரிச் சங்கம் எண்டபேரில ஒரு அறிக்கை நேற்று வந்தது. பாலர் வகுப்புப் பிள்ளையள் 'அவன் என்ர பென்சிலை எடுத்திட்டான், இவன் என்ர கொப்பியைத் தொட்டிட்டான்' எண்டு சொல்றமாதிரி கிடக்குது. அந்த அறிக்கையில அர்ச்சுனா டாக்குத்தருக்கு எதிராச் சொல்லியிருக்கிற முறைப்பாடுகள். அதிலையும் கடைசியா ஒரு முறைப்பாடு, உலகமகா குற்றம் போலதான் கிடக்கு. அர்ச்சுனா டாக்குத்தர், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில வருத்தக்காரருக்கு குடுக்கவெண்டு சமைச்ச சாப்பாட்டை தானும் சாப்பிட்டுட்டாராம். அது பெரும் ஊழலாம். ஆஸ்பத்திரிச் சாப்பாடு என்ன விறுத்தத்தில இருக்குமெண்டு எல்லாருக்குமே தெரியும். தொண்ணூறு வீதமான வருத்தக்காரர் வீட்டில இருந்துதான் சாப்பாடு எடுத்துச் சாப்பிடுறவை. ஆஸ்பத்திரியளில சமைக்கிற சாப்பாடுகள் மிஞ்சிப்போய், கொட்டுறதுதான் வாடிக்கை. அப்பிடி மிஞ்சிற சாப்பாட்டை சாப்பிட்டதுதான் அர்ச்சுனா டாக்குத்தர் செய்த உலகமகா ஊழலாம். கோடிக்கணக்கில மருந்துகளையும், மிசின்களையும் ஆட்டையைப் போட்டவைக்கு இது பெரிய்ய்ய்ய ஊழலாத்தான் தெரியும்.

இன்னொண்டும் சொல்லோணும். அந்த அறிக்கையை வெளியிட்ட நலன்புரிச் சங்கத்தின்ர லெட்டர்ஹெட்டில முதலாவதா இருக்கிற பேர், யாழ். பிராந்தியத்துக்குப் பொறுப்பா இருக்கிற டாக்குத்தர். இப்ப விளங்கியிருக்குமே உந்த அறிக்கையின்ர சீத்துவம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி தாவவுள்ள ஐ.ம.ச. எம்.பி.க்கள்

கொழும்பு, ஜூலை 9

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் டொலரில் வெகுமதிகளை பெற்று கட்சியை விட்டு வெளியேறுவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரும் விரைவில் அரசாங்கத்துக்குச் செல்வார்கள்.

இந்த அரசியல் விபச்சாரிகள் அமெரிக்க டொலரில் பண வெகுமதிகள் உட்பட சலுகைகளுக்கு வீழ்ந்துள்ளனர்.

நாம் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே இழக்கப்போகிறோம், ஆனால் பலர் தங்கள் பதவிகளை விட்டுக் கொடுத்து எதிர்க்கட்சிக்குச் செல்லத் தயாராக உள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)








# முடிந்தால் வடக்கில் கூறுங்கள்

## ஜே.வி.பி.க்கு தயாசிறி சவால்!

கொழும்பு, ஜூலை 9

"போரை முடிவுக்குக் கொண்டுவரவே, 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கப்பட்டது என ஜே.வி.பி.யினர் வடக்கில் சென்று கூறிக்காட்டட்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சவால் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் போட்டியிட்டால் அது தேசிய மக்கள் சக்திக்கு ஓரளவு சாதகமாக அமையக்கூடும் எனவும் அவர் கூறினார்.

எனினும் வெற்றிபெறும் சக்தியாக தேசிய மக்கள் சக்தி மாறாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். "ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியும் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும். ஏனெனில் மொட்டுக் கட்சியில் இணையவேண்டும், தேசிய வளங்கள் விற்கப்படக்கூடாது, மஹிந்த சிந்தனையை ஏற்கவேண்டும் என்றெல்லாம் அக்கட்சி முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு ரணில் விக்கிரமசிங்க இணங்கமாட்டார்.

அவ்வாறு மொட்டுக் கட்சி வேட்பாளரை நிறுத்தினால் ஜே.வி.பி.க்கு வாக்கு வங்கியில் குறைவு ஏற்படும். ஏனெனில் மொட்டுக் கட்சி வாக்குகளே ஜே.வி.பி. பக்கம் சென்றிருந்தது.

2005 ஆம் ஆண்டு ஆட்சியில் ஜே.வி.பி. பங்காளியாக இருந்தது. பின்னர் 2010 இல் ஐ.தே.க. தரப்புடன் இணைந்து செயற்பட்டனர். 2015 இல் வெளியிலிருந்து மைத்திரிக்கு ஆதரவு வழங்கியது. எனவே, தற்போதைய நிலைமைக்கு ஜே.வி.பி.யும் பொறுப்புக்கூறவேண்டும்.

அதில் இருந்து அவர்கள் நழுவமுடியாது - என்றார். (ப-44)

### திருவாசகப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருக்கேதீச்சரம் திருவாசகமடத்தினர் நடத்தும் திருவாசகப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை திருக்கேதீச்சரம் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள திருவாசக மடத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)

# ஐந்தாண்டுகளுக்கு ரணிலுக்கு ஆதரவு

## தெலவத்த எம்.பி. வலியுறுத்தல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலைவாராது மேலும் ஐந்தாண்டுகளுக்கு அவருக்கு ஆதரவை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தீர்மானிக்கவேண்டும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தெலவத்த தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் தேர்தலையோ அல்லது ஆட்சி மாற்றத்தையோ கோரவில்லை. நிவாரணத் திட்டங்களையே எதிர்பார்க்கின்றனர். பணவீக்கம் வீழ்ச்சி அடைந்திருந்தாலும் அதன் பலன் மக்களுக்கு இன்னும் கிட்ட வில்லை. அதற்குரிய ஏற்பாடுகளை அரசு முன்னெடுக்கவேண்டும் என்பதும் மக்களின் கோரிக்கையாக உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்கி நிச்சயம் வெற்றிபெறுவார். அவர் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிவருகின்றார். அதனை நாம் உணர்ந்துள்ளோம். ரணிலால் மட்டுமே முடியும் என மக்களும் கருதுகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சியே ஜனாதிபதி பதவிக்குப் பரிந்துரைத்தது . எனவே, அவரின் காலைவாராது இணைந்து பயணிக்க முன்வரவேண்டும். இன்னும் ஐந்து வருடங்கள் அவருக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். நாட்டின் தலைவராவதற்கு நாமலுக்கு காலம் உள்ளது. அவர் பொறுமையுடன் செயற்படுவது சிறப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ- 44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போராட்டங்களின் தேசம்!


மீண்டும் நாட்டில் மக்கள் போராட்டங்கள் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத மக்கள் மீண்டும் வீதிகளில் இறங்க ஆரம்பித்திருக்கின்றனர். கோத்தாபயவின் ஆட்சியில், அவரது அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததை அடுத்து, இலங்கையின் வரலாற்றில் இதுவரை இல்லாதவாறு மக்கள் போராட்டம் வெடித்தது. அதேபோன்றதொரு நிலைதான் தற்போது மீண்டும் ஏற்பட எத்தனித்திருக்கின்றது. ஆசிரியர்கள் ஒருபுறம், அரச ஊழியர்கள் மறுபுறம், தோட்டத்தொழிலாளர்கள் இன்னொருபுறம் என போராட்டங்களின் தேசமாகத்தான் இலங்கை இன்று எஞ்சியிருக்கின்றது.

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் பதவியேற்ற பின்னர் தற்காலிக ஏற்பாடுகளால் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் மறைக்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்திடம் பெறப்பட்ட கடனுதவி மூலம் சிலமாற்றங்கள் ஆட்சியாளர்களால்கொண்டுவரப்பட்டன. ஆனால்நாட்டின்பொருளாதாரத்தை நிலையாகக் கட்டியெழுப்பும் எந்த முயற்சியும் தற்போதைய ஆட்சியாளர்களால் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. நாட்டின்வருமானத்தை அதிகரிக்கும் வழிகளைத் தேடாமல், கடன்களைக் கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துவந்தது, முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்த நகர்வு நாட்டு மக்கள் மீதான சுமையை அதிகரிக்குமே தவிர ஒருபோதும் குறைத்து விடாது. உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து அவற்றை ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசாங்கத்துக்கு அறவேயில்லை. எந்த நாட்டிடம், எந்த அமைப்பிடம் கடன் வாங்கிக் காலத்தை ஓட்டலாம் என்ற கொள்கையில் இயங்கிக்கொண்டிருக்கும் அரசாங்கம்தான் இது. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பதைப் போல, நாணய நிதியத்தைப் பயன்படுத்தி, தமது அரசியல் இருப்பை பலப்படுத்தவே ரணில் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் முயற்சிக்கிறார்களே தவிர, மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கும் உபாயங்கள் எதனையும் அவர்கள் தேடுவதாக இல்லை.

தற்போது மீண்டும் துளிர்விடத் தொடங்கியுள்ள போராட்டங்களுக்குக் காரணமும் இதுவே. அரச ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி போராட்டங்களை ஆரம்பித்திருக்கும் நிலையில், பொதுமக்கள் மின்கட்டண உயர்வுக்கு எதிராகவும், ஏனைய விலையேற்றங்களுக்கு எதிராகவும் வீதிகளில் இறங்க ஆரம்பித்திருக்கின்றனர். ஆசிரியர்களின் கதையோ ஆகப்பெரும் துயரமாக மாறியிருக்கின்றது. கம்பனிகளால் உறிஞ்சப்படும் இரத்தத்தை விட, அட்டைகள் எவ்வளவோ மேன்மையானவை என்பதுதான் தோட்டத்தொழிலாளர்களின் நிலைப்பாடு.

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஆட்சியாளர்கள் தகிடுதத்தங்களைச் செய்யாமல், நாட்டின் உண்மையான பிரச்சினையை இனங்கண்டு தீர்க்க முயன்றால் மட்டுமே நெருக்கடியில் இருந்து மீளமுடியும். ஆனால், அரசாங்கத்தின் நடவடிக்கைகளும், நகர்வுகளும் தேர்தல்களை மையப்படுத்தியதாக மட்டுமே இருக்கின்றன. அதைத்தாண்டிய ஆரோக்கியமான கவனக்குவிவென்பது இப்போது கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் இல்லவேயில்லை.




# ஜனாதிபதி பதவிக்காலம் 5 ஆண்டுகள் மட்டுமே!

## சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதிமன்றில் விளக்கம்

**கொழும்பு, ஜூலை 9**

**அரசமைப்பின்படி ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகளே என்று சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.**

சட்டமா அதிபர் சார்பில் உயர்நீதிமன்றில் முன்னிலையாகிய பிரதிசொலிசிட்டர் ஜெனரல் கனிஸ்க டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக நீதிமன்றம் விளக்கமளிக்கும்வரை ஜனாதிபதி தேர்தலுக்கு இடைக்கால தடைவிதிக்கவேண்டும் எனக் கோரி வர்த்தகர் சமிந்திரன் தயான் லெனாவா தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் அவர் உயர்நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்தார். (எ-இ)

## இலங்கை - அமெரிக்கா புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கைத் துறைமுக அதிகாரசபை, அமெரிக்காவின் வேர்ஜீனியா மாநில துறைமுக அதிகாரசபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது. கொழும்புத் துறைமுகம் இந்து சமுத்திரத்தில் முக்கியமான ஒரு துறைமுகம்.

அதேபோல், வேர்ஜீனியா துறைமுகமும் அமெரிக்காவின் வெளிநாட்டுச் சந்தைக்கான நுழைவாயிலாகக் கருதப்படுகிறது. அதனால் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடையுமெனவும் பொருளாதாரம் மேம்படுமெனவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (ப-6)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு பாடகி காயம்

அத்துருகிரிய ஒருவல நகரில் நேற்று நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், பிரபல பாடகி சுஜீவா உட்பட ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 'கிளப் வசந்த' என்ற நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தோர்ஹோமாகமமற்றும் அத்துருகிரிய மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-இ)

## 6 மாதங்களில் கறுவா வருமானம் 15 மில்லியன் ரூபா

கொழும்பு, ஜூலை 9

கறுவா ஏற்றுமதி மூலம் முதல் ஆறு மாதங்களில் 15 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தித்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜனகலிந்தர தெரிவித்துள்ளார். இந்தக் காலப் பகுதியில் 60 மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மெக்ஸிக்கோ, அமெரிக்கா, பெரு போன்ற நாடுகளுக்கே அதிகளவில் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-66)



## கல்முனையில் சுற்றுலா தகவல் நிலையம்

அம்பாறை, ஜூலை 9

கல்முனையில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக, 69.44 பேர்ச் நிலத்தைசுவீகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை, இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். கல்முனை கடற்கரையில் வாடி வீட்டு வீதியில் இந்தச் சுற்றுலாத் தகவல் நிலையம் அமைக்கப்படவுள்ளது. (ப-6)

**நாளை**

10.07.2024

புதன்கிழமை - ஆனி - 26

சுபநேரம் : 04.28 - 05.58

ராகுகாலம் : 11.8 - 01.28

**நாளொரு நல்வார்த்தை**

பரிந்துரை ஒருவரை அறிமுகம் மட்டுமே செய்யும். தகுதிதான் அவரை நிலைபெறச் செய்யும்.

- வைரமுத்து -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், ஜூலை 9

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும், சிறப்புச்சொற்பொழிவும், தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் 'மாணிக்கவாசக சுவாமிகளின் வாக்கும் வாழ்வும்' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் பொன்.சந்திரவேல் சொற்பொழிவு ஆற்றுவார். (ப)

# வசாவிளான் மத்தி வலைப்பந்தில் வாகை

யாழ்ப்பாணம், ஜூலை 9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுகளின் வரிசையில், 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில், முதலாம் இடம்பெற்று சம்பியனை தட்டிச் சென்றது வசாவிளான் மத்திய கல்லூரி.

மகாஜனக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போட்டியில் 2 ஆம் இடத்தை புனித ஹென்றியரசர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரியும், 4 ஆம் இடத்தை மகாஜனக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ப-555)

# யாழ்., கிளிநொச்சியில் தொழிற்கற்கைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் பாடசாலையை விட்டு விலகியவர்கள், மேற்படிப்பைத் தொடரமுடியாதவர்கள் மற்றும் வேலைவாய்ப்பின்றி இருப்பவர்களுக்கு உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள தொழில்வாய்பை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி, பளை, பழைய கச்சேரி, கிளிநொச்சி ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களிலும் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 சான்றிதழ்களுக்கான பயிற்சிநெறிகள் நடைபெறுகின்றன.

கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம். அல்லது மாவட்ட அலுவலகம், 155ஆம் கட்டை, கிளிநொச்சி ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு 0212227949, 071 0318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு தற்காலிக தலைவர் சட்டத்தரணி கனக நமநாதன் தலைமையில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது தலைவராக கனக நமநாதன், செயலாளராக பொ.கேசவநாதன், உப தலைவராக மருத்துவர் இ.கதிர்காமநாதன், உப செயலாளராக நா.சுந்தரலிங்கம், கணக்காய்வாளராக இ.இரத்தினசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களாக திருமதி க.பாலசுப்பிரமணியம், திருமதி ஜே.இராஜேந்திரா, சீ.சற்குணரட்ணம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-25)

# நட்புறவுப் பயணம்!

வவுனியா , ஜூலை 9

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட சமுதாயப் பொலிஸ் குழுத் தலைவர்கள் அநுராதபுரம் மற்றும் மிஹிந்தலை ஆகிய பகுதிகளுக்கு நட்புறவுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலின் கீழ் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட 17 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து சமுதாயப் பொலிஸ் குழுத் தலைவர்கள் இந்த நடைபயணத்தில் இணைந்துள்ளனர். (ச-22,18)



## கால்பந்தாட்டப் போட்டிகள்

# மூன்று பிரிவுகளிலும் பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். வலய மட்ட கால்பந்தாட்டப் போட்டிகளில் 3 பிரிவுகளிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

20 வயதுப்பிரிவுக்கான இறுதிப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் போட்டியிட்டதில் சென்.பற்றிக்ஸ் அணி வெற்றியீட்டியது. 18 வயதுப்பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதியதில் சென். ஜோன்ஸ் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சென். பற்றிக்ஸ் சம்பியனானது.

16 வயதுப்பிரிவுக்கான இறுதிப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டதில் 1:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் வெற்றியீட்டியது. (ச-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்கு திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களின் மூலம் முக்கியமான பிரச்சினை ஒன்று நல்லபடி முடிவுக்கு வரும்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது.மனஉறுதியுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். தட்சிணாமூர்த்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதர வகையில்எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்ய வேண்டிவரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு கடன் அதிகரிக்கும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். வீட்டில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டி வரும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 9


தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான பிரதேச விளையாட்டுவிழா, கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் க.விஜிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ப-9)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினர் கடந்த மாதம் நடத்திய, புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு வாரத்தில் சேகரித்த நிதியில், கைதடி சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கடந்த வியாழக்கிழமை 3 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள், கைதடி சமுர்த்தி வங்கி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (ப-9)





வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா, கடந்த வியாழக்கிழமை முற்பகல் ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றது. (ப-66)



கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்களுக்கான திறன் விருத்தி மற்றும் இலக்கு நிர்ணயித்தல் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வு, நல்லூர்ப் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரால் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டன. (ப-66)


## ஐ.தே.க. காரியாலயம் வவுனியாவில் திறப்பு

வவுனியா, ஜூலை 9

வவுனியாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட நகரக் காரியாலயம், கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா நகர அமைப்பாளர் சி.பிரேமதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர், வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-18)







வட்டுக்கோட்டை மண்ணைப் பசுமைப்புரட்சியாக்கும் செயற்றிட்டத்தின் கீழ், 'மரம் வளர்ப்போம் மனித வளம் காப்போம்' எனும் தொனிப்பொருளில் மரம் நடும் விழா, கொற்கைத்துறை இந்து மயானத்தில் கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்வில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பொது மக்களும் இணைந்து 100 மரங்களை நட்டு வைத்தனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாப் பல்கலைக்கழகத்தின்
# பேராசிரியர் அற்புதராஜா துணைவேந்தராக பதவி!



வவுனியா, ஜூலை 9

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா நேற்றுத் திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாகப் பதவியேற்றுக் கொண்டார்.

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மண்டபத்தில் பல்கலைக்கழகப் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியாப் பல்கலைக் கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-66-110)

# பட்டதாரிகளுக்கு ஆளுநரால் நேற்று ஆசிரிய நியமனங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விமானி பட்டதாரிகள் 13 பேருக்கு, ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸால் நேற்று ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும் ஆசிரியர்கள், தாம் கற்றுக்கொண்ட நுட்பங்களை பாடசாலைகளில் பயன்படுத்தி, கற்பித்தல் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதனூடாக கல்வித் தரத்தை பேணுவதுடன், மாணவர்கள் இலகுவாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும். மாணவர்கள் பாடசாலைக்கு விரும்பி வருகை தரும் வகையில் வகுப்பறைகள் மாற்றப்படவேண்டும் என்றும் இதன்போது ஆளுநர் தெரிவித்தார். (ம-26-27)



## ஓவியக் காட்சி!

மட்டக்களப்பு, ஜூலை 9

திருக்கோவில், மட்டக்களப்பு, புத்தளம்,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐந்து ஓவியர்கள் இணைந்து உருவாக்கியிருந்த நிறணி ஓவியக் குழுவின் முதலாவது காண்பியக் காட்சி ஜூலைமாதம்11ஆம்திகதிமுதல் 14ஆம் திகதிவரை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. (ம)


## நவாலிப் படுகொலையின் 29ஆவது நினைவு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 9

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், நவாலி சின்னக் கதிர்காமம் முருகன் ஆலயம் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் பலியானோரின் 29ஆவது ஆண்டு நினைவுநாள் இரங்கல் திருப்பலியும் அஞ்சலி நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01.05.1944 — மறைவு 08.07.2024



**கதிரமலை உருத்திரமூர்த்தி**

**(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்- மாவட்ட கல்வித் திணைக்களம்-முல்லைத்தீவு)**

அம்பனை தெல்லிப்பழையை பிறப்பிடமாக கொண்ட கதிரமலை உருத்திரமூர்த்தி நேற்று (08.07.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற கதிரமலை-தடாதகை பிராட்டியாரின் அன்பு மகனும் அமரர் சிவஞானேஸ்வரியின் (சந்திரா) அன்புக் கணவரும் விஜயநாதேஸ்வரன், குமாரதேவன், தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிருபானந்தன் (ஆசிரியர் யா/விக்டோரியா கல்லூரி-சுழிபுரம்), பிறேமானந் (ஆசிரியர்-யா/வசாவிளான் மத்திய கல்லூரி), ஜீவானந்தம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்-தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை- மட்டகளப்பு), சங்கர் ஆனந் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-கச்சேரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோபனா, கிருவாசினி, தசாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷ்ணிகா,கோமளன் நிருத்திகா,பகலவன், ஆதவன், திவாகரன், கோசலை ,விதுஷன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.07.2024) செவ்வாய்க்கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செருக்கம்புலம் வீதி,**
**அம்பனை,**
**தெல்லிப்பழை.**

(CR 42797) V-1

**தகவல்: குடும்பத்தினர்**
**077 [illegible] 3044 (மகன்)**

## மரண அறிவித்தல்

தோற்றம் 27.11.1967 — மறைவு 06.07.2024



**பாக்கியராசா தயாவேணி (தயா)**

சுன்னாகம் கிழக்கு வெளிப்புலத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியராசா தயாவேணி (தயா) கடந்த (06.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - யோகேஸ்வரி (ரத்தினம்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ராசையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சங்கீர்த்தனனின் (யூனியன் கல்லூரி பழைய மாணவன்) அன்புத் தாயாரும், விஜயவேணி (பிரான்ஸ்), ராஜபவன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், சந்திரகுமார் (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சுபோதினி, யொனார்த்தன், அனோயன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/55626) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் காப்புறுதி ஒப்பந்தாரர்களுக்கு மாபெரும் ரூ. 11.2 பில்லியன் போனஸ் கொடுப்பனவு அறிவிப்பை ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் வெளியிட்டுள்ளது





• 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் மொத்தமாக ரூ. 104 பில்லியனை வருடாந்த போனஸ் கொடுப்பனவாக வழங்கியுள்ளதுடன், இதுவரையில் அதிகளவு போனஸ் கொடுப்பனவு தொகை வழங்கப்பட்ட ஆண்டாகவும் அமைந்துள்ளது.

09 ஜூலை 2024, கொழும்பு - தேசத்தின் காப்புறுதியாளரான ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப், தனது காப்புறுதிதாரர்களுக்கு துறையின் மாபெரும் போனஸ் கொடுப்பனவுத் தொகையான ரூ. 11.2 பில்லியனை 2023 ஆம் ஆண்டுக்காக அறிவித்துள்ளது. 2006 ஆம் ஆண்டு முதல் தொழிற்துறையில் அதியுயர் ஆயுள் காப்புறுதி போனஸ் கொடுப்பனவுகளை பிரகடனம் செய்து வருவதுடன், இதுவரையில் மொத்தமாக ரூ. 104 பில்லியனுக்கு அதிகமான தொகையை போனஸ் கொடுப்பனவாக பிரகடனம் செய்துள்ளது.




நாட்டில் மாபெரும் மற்றும் அதியுயர் ஆயுள் காப்புறுதி போனஸ் தொகையை பிரகடனம் செய்து, இலங்கையின் உறுதியான காப்புறுதி சேவைகள் வழங்குநர் எனும் காப்புறுதிதாரர்களின் நம்பிக்கையை ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைஃப் மேலும் உறுதி செய்துள்ளது. உள்ளக மாற்றங்கள் மற்றும் பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் நிறுவனத்தினால் உணரப்பட்ட போதிலும், ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைஃப் நிறுவனம் தனது சொத்துக்கள் இருப்பை ரூ. 221 பில்லியனாக அதிகரித்திருந்ததுடன், ஆயுள் நிதியத்தை ரூ. 180.8 பில்லியனாக அதிகரித்திருந்தது. அதனூடாக, மாபெரும் மற்றும் உறுதியான உள்நாட்டு காப்புறுதிதாரர் எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்திருந்தது. மேலும், வருடாந்த போனஸ் பிரகடனத்துக்கு மேலதிகமாக, மாதாந்த சராசரி ஆயுள் காப்புறுதி உரிமைகோரல் வழங்கல்கள் ரூ. 1 பில்லியனை கடந்து, வருடாந்தம் ரூ. 12 பில்லியன் எனும் தொகையை எய்தியிருந்தது. நிறுவனத்தின் மதிநுட்பமான முதலீட்டு நிர்வாக மூலோபாயங்களை இது உறுதி செய்திருந்ததுடன், தனது காப்புறுதிதாரர்கள் மற்றும் அவர்களின் நலன் ஆகியவற்றின் மீதான ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸின் அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்திருந்தது.

நிறுவனத்தின் கூட்டாண்மை முகாமைத்துவம், பிராந்திய முகாமைத்துவம், விற்பனை செயலணி மற்றும் வாடிக்கையாளர்கள் பிரசன்னத்தில் 2024 ஜூலை 06 ஆம் திகதி நுவரெலியாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் உத்தியோகபூர்வ போனஸ் பிரகடனம் தொடர்பான அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் பிரிவின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சந்தன எல் அளுத்கம 2023 ஆம் ஆண்டுக்கான போனஸ் பெறுமதிகளை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, போனஸ் பிரகடனம் தொடர்பான தொடர்பாடல் அறிவிப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் தொடர்பில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் பிரிவின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சந்தன எல் அளுத்கம கருத்துத் தெரிவிக்கையில், "60 வருடங்களுக்கு மேலான பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட நிறுவனமாக நாம் திகழ்வதுடன், எப்போதும் வாடிக்கையாளர்களுக்கான எமது வாக்குறுதியை பேணியிருந்தோம். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், எமது வாடிக்கையாளர்களின் நலனுக்கு முக்கியத்துவமளிப்பது எனும் நோக்கத்துக்கு நாம் முன்னுரிமையளித்திருந்தோம். நிறுவனத்தின் மதிநுட்பமான நிர்வாக மூலோபாயங்கள் மற்றும் வியாபார வளர்ச்சியை நோக்கிய நேர்த்தியான அணுகல் போன்றவற்றினூடாக 2023 ஆம் ஆண்டில் சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்ய முடிந்திருந்தது. எமது காப்புறுதிதாரர்கள் மீதான எமது அர்ப்பணிப்பு என்பதில் நாம் அதிகளவு முக்கியத்துவமளித்திருந்ததுடன், இதன் பெறுபேறாக ரூ. 11.2 பில்லியன் போனஸ் பிரகடனம் அமைந்துள்ளது." என்றார்.

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் பிரிவின் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. ரொனல்ட் சி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "எமது காப்புறுதிதாரர்களுக்காக ரூ. 11.2 பில்லியன் போனஸ் தொகையை பிரகடனம் செய்வதற்கான எமது ஆற்றலினூடாக, ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைஃப் பிரிவின் நிதி வலிமை மற்றும் நிறுவனம் எனும் அடிப்படையில் எமது மீண்டெழுந்திறன் ஆகியன வெளிப்படுத்தப்பட்டுள்ளன." என்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில், வாடிக்கையாளர்களுக்கு அதிகூடிய தொகையை போனஸ் தொகையாக பிரகடனம் செய்த தனி நிறுவனமாக இது அமைந்திருப்பதுடன், நாட்டில் இதுவரையில் வேறெந்தவொரு நிறுவனமும் இந்த மைல்கல்லை எய்தவில்லை என்றார். கூட்டாண்மைத் துறையில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் பிரிவை இந்த சாதனை உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு சென்றுள்ளதுடன், தொழிற்துறையில் முன்னோடியாகத் திகழ்வதற்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது.

வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடு என்பது ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் நிறுவனத்தின் பிரதான மூலோபாய அங்கங்களில் ஒன்றாக அமைந்திருப்பதுடன், புதிய சந்தைப் பிரிவுகளை இனங்காணல் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொண்டு சகாயமான மற்றும் பொருத்தமான தீர்வுகளை வடிவமைத்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றது. நீண்ட கால பாதுகாப்புடன் குறுகிய கால முதலீட்டு திட்டமான "வெல்த் ப்ளஸ்" தற்போது நெகிழ்ச்சியான கொடுப்பனவு தெரிவுகளுடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு பெருமளவு சௌகரியத்தையும் வழங்கியுள்ளது. தீர்வுகள் மற்றும் செயன்முறை புத்தாக்கங்களில் ஈடுபடுவதற்கு மேலதிகமாக, தனது வாடிக்கையாளர்களுக்காக பல்வேறு பெறுமதி சேர்ப்புகள் தொடர்பிலும் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது. இதன் பெறுபேறாக, ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் தனது லைஃப் லோயல்டி வெகுமதித் திட்டத்தை (Life Loyalty Rewards) தொடர்ச்சியாக மேம்படுத்தி, வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவு சலுகைகள் மற்றும் அனுகூலங்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பை வழங்குவதுடன், காப்புறுதி தவணை காலப்பகுதி முழுவதிலும் வாடிக்கையாளர்களுக்கு உயர் பெறுமதியை அனுபவிப்பதற்கான வசதியும் ஏற்படுத்தியிருந்தது.

மேலும், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் ஸ்தாபிக்கப்பட்டது முதல், இலங்கை மக்களுக்கு ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கு அதிகளவு முக்கியத்துவமளிக்கின்றது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும், அனைத்து இலங்கையர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், ஆயுள் காப்புறுதியை பிரபல்யப்படுத்துவதில் தேசிய காப்புறுதி சேவைகள் வழங்குநர் எனும் வகையில் முன்னிலையில் திகழ்கின்றது.

நாட்டிலுள்ள முன்னணி காப்புறுதிதாரர் எனும் வகையில், நாட்டினுள் காப்புறுதி கட்டமைப்பை மாற்றியமைப்பதற்காக தொழில்நுட்பத்தை பின்பற்றுவது என்பதில் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைஃப் கொண்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு உயர் சேவை அனுபவம் மற்றும் சௌகரியத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், டிஜிட்டல் ஆற்றல்களை மேலும் வலுப்படுத்தி பெறுமதி சேர்க்கும் வகையில் தனது காப்புறுதித் தீர்வுகள் மற்றும் செயன்முறைகளை டிஜிட்டல் ஒருங்கிணைப்பு செய்யும் பணிகளை துரிதப்படுத்தி வருகின்றது. ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் நிறுவனத்தினால் தனது முதலாவது ஒன்லைன் ஆயுள் காப்புறுதித் திட்டமாக Early Cash Online, என்பது அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதனூடாக, பரிபூரண டிஜிட்டல் அனுபவம் வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது காப்புறுதித் திட்டங்களை சௌகரியமாகவும், வெளிப்படையாகவும் மாற்றியமைத்துக் கொள்ளும் [illegible] எனும் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தது.

அண்மையில் [illegible] இனால் அதிகளவு விரும்பப்படும் காப்புறுதி வர்த்தக நாமம்" எனும் கௌரவிப்பு ஸ்ரீலங்கா இன்சூரன்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. நாட்டு மக்கள் மத்தியில் ஒரு வர்த்தக நாமமாக ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் லைஃப் ஏற்படுத்தியுள்ள தாக்கம், சந்தையில் கொண்டுள்ள உறுதியான பிரசன்னம் மற்றும் நாட்டு மக்களின் மீது அதிகளவு அக்கறை கொள்ளக்கூடிய வர்த்தக நாமத்தின் ஆற்றல் போன்றன உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் அண்மையில் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோபரேஷன் லைஃப் லிமிடட் (SLICLL) மற்றும் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடட் (SLICGL) என வகைப்படுத்தப்பட்டிருந்ததனூடாக, வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு புதிய வாய்ப்புகளை இனங்கண்டிருந்தது. இந்த சட்டபூர்வ வகைப்படுத்தலினூடாக, ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோபரேஷன் லைஃப் லிமிடெட் நிறுவனத்தின் மூலோபாயங்களில் அதிகளவு கவனம் செலுத்தி நிறைவேற்றக்கூடியதாக அமைந்திருப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வினைத்திறனுடனான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதையும் உறுதி செய்கின்றது. உயர்தரமான வாடிக்கையாளர் சேவை எனும் தனது அர்ப்பணிப்பை ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோபரேஷன் லைஃப் லிமிடட் தொடர்ந்தும் பேணுகின்றது. 2024 ஆம் ஆண்டில் அதன் வியாபார செயற்பாடுகளினூடாக "கவனம் செலுத்தப்பட்ட விசேடத்துவங்களினூடாக வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகள்" என்பது மாறாமல் பேணப்படுகின்றது.

சமூகத்தாருக்கு, பிரிவுகளுக்கு வயதுக் குழுக்களுக்கு மற்றும் மாறுபட்ட இணைந்த குழுக்களுக்கு தனது தீர்வுகள் மற்றும் சந்தை முன்னேற்ற செயற்பாடுகளினூடாகவும், நடைமுறைச் சாத்தியமான மற்றும் [illegible] காப்புறுதித் தீர்வுகளினூடாகவும் பாதுகாப்பளிப்பது தொடர்பான வழிமுறைகளை தொடர்ந்தும் இனங்காணும் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் ஈடுபட்டுள்ளது. பரந்த 190 கிளைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் எனும் பரந்த மற்றும் வலிமையான ஆலோசகர் வலையமைப்புடன், தேசத்தின் மக்களுக்கு பாதுகாப்பை வழங்கும் காப்புறுதிக் கடப்பாட்டுக்கு அப்பால் சென்று சேவைகள் வழங்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு, கிழக்கை மையப்படுத்தி நன்கொடையாளர்களின் மாநாடு

## சஜித் மீண்டும் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 9**

**போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தி, இதுவரை எந்தத் தலைவர்களும் தலைமைத்துவம் வழங்காத சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்த நாம் நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.**

மன்னார் புனித ஜோசப் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உதவிகளைப் பெற்று, வடக்கு, கிழக்கு இரு மாகாணங்களை மையமாகக் கொண்டு, முழுநாட்டையும் உள்ளடக்கிய வகையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம். இன, மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி 41 இலட்சம் பிள்ளைகளினது நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பாதுகாத்துத் தருவோம்.

வட மாகாணம் இதுவரை மாற்றாந்தாய் கவனிப்பையே பெற்று வந்தது. இந்த யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து, இந்த மாகாணத்தின், மாவட்டத்தின் அபிவிருத்தி யுகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்போம். எமது நாட்டு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு மீனவ சமூகத்தால் எமது மீனவ சமூகத்தினர் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த பிரச்சினைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் கலந்துரையாடி தொடர்ச்சியாக நிலவி வரும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் - என்றார். (ஒ-இ)

## மூதாட்டி குத்திக் கொலை

கண்டி, ஜூலை 9

கண்டி எத்கால்ல பொலிஸ் பிரிவுக்குபட்ட உலப்பனை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மூதாட்டி ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொலை செய்யப்பட்டுள்ளார் என்று எத்கால்ல பொலிஸார் தெரிவித்தனர்.

78 வயதுடைய மூதாட்டி ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் தனது பேரனின் குடும்பத்தினருடன் ஒன்றாக வாழ்ந்த நிலையில், குடும்பத் தகராறு காரணமாக, பேரன் வீட்டில் இல்லாத சமயத்தில் பேரனின் மனைவி தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளாள்ன்றுகூறப்படுகின்றது. பேரனின் 32 வயது மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக் கப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-25)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் ஆசியுரையையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும் வழங்குவர். "குரு பக்தி" எனும் விடயப்பொருளில் இளஞ் சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க.கயிலைவாசன் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-25)

*************

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கதின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-13, தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர், பிரசங்கபூஷணம் க.கைலநாதன் "மாணிக்கவாசகரும் திருப்பூவல்லியும்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-25)

## ஜூலை மாதத்துக்குள் புதிய மெகா கூட்டணி

கொழும்பு, ஜூலை 9

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி எதிர்வரும் 17 ஆம் திகதிக்குப் பின்னர் அறிவிக்கப்படவுள்ள நிலையில், ஜூலை இறுதிக்குள் மெகா கூட்டணியை மக்கள் மயப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன எனவும், கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை ஆளுந்தரப்பு மற்றும் இதர கட்சிகளில் இருந்து 10 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிதாக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைவார்கள் எனவும் அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியான பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக சஜித் பிரேமதாஸ நேரடிப் பேச்சுகளில் ஈடுபடவுள்ளார் எனவும் மேலும் அறியமுடிகின்றது. (எ-44)

## சுற்றுலா விடுதிகளாக மாறும் வாடி வீடுகள்!

கொழும்பு, ஜூலை 9

வருமானம் குறைந்த வாடி வீடுகளை சுற்றுலாவிடுதிகளாக மாற்றுவதற்கு, நகர அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது. இதன்மூலம் சுற்றுலாவிகளின் வருகையை அதிகரிக்கலாம் என நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் நிமேஷ் ஹேரத் தெரிவித்துள்ளார்.

வருமானம் குறைந்த 51 வாடி வீடுகள், இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், இந்தத் திட்டத்தினூடாக உள்ளூர் வெளியூர் முதலீட்டாளர்களுடன் இணைந்து, 500 சுற்றுலா விடுதிகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-6)

## பொலிஸ் நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு, ஜூலை 9

கல்கிஸை பிரிவுக்குட்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் உள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தில் அலுவலகத்தில் இருந்த பல ஆவணங்கள் சேதமடைந்துள்ளதாகவும், தீ பரவல் ஏற்பட்ட போது பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் புஷ்ப குமார அலுவலகத்தில் இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து தொடர்பில் கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர். (எ-25)

## கடலில் மூழ்கியவர்கள் உயிர்காப்புப் பிரிவால் மீட்பு

திருகோணமலை, ஜூலை 9

திருகோணமலை பிரதேசத்திலுள்ள நிலாவெளி கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஆறு பேர் திருகோணமலை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். (எ-25)

## கூட்டுறவு தினம்

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 102ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் க.கோஃஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருமான ந.திருலிங்கநாதன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரம், கௌரவ விருந்தினர்களாக வறுமையில் திறமை நிதிய தெரிவுக்குழு உறுப்பினரும் ஓய்வுநிலை அதிபருமான த.கந்தையா, ஓய்வுநிலை பொது முகாமையாளரும் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் ஆலோசகருமான சி.தேவகுமார், வரணி மத்திய கல்லூரி அதிபர் ஆ.தங்கவேலு, கொடிகாமம் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி சி.ரமேஸ் குணதிலக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-159)

## குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், ஜூலை 9

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்களின் ஏற்பாட்டில், சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும், சொற்பொழிவுத் தொடரும் பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. சைவப் புலவர் பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேலின் "மாணிக்கவாசக சுவாமிகளின் பக்தி" எனும் விடயப்பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-25)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சாவகச்சேரியில்...

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிலவும் சுகாதாரக் குறைபாடுகள் தொடர்பாகப் புதிதாகப் பொறுப்பேற்ற பதில் மருத்துவ அத்தியட்சகர் அர்ச்சுனா அம்பலப்படுத்தியிருந்தார். அத்தோடு குறித்த மருத்துவமனையை மேம்படுத்தும் முயற்சியிலும் அவர் இறங்கியிருந்தார். இந்தநிலையில், நேற்றுமுன்தினம் இரவு அவரைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் அங்கு சென்றதையடுத்து மக்கள் மருத்துவருக்கு ஆதரவாகக் களமிறங்கியிருந்தனர்.
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னேற்றத்திற்காகச் செயற்படுமுனையும் புதிய பதில் மருத்துவ அத்தியட்சகருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதிகளை உடைத்தெறியவும், மருத்துவமனையின் பணிகளை உடன் வழமைக்குக் கொண்டுவர வலியுறுத்தியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கும் கடையடைப்புக்கும் சாவகச்சேரிப் பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்களால் அழைப்பு விடுக்கப்பட்டது.
இந்த அழைப்பின் பிரகாரம் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையை முடக்கியும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாகச் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள பொதுச் சந்தை, வர்த்தக நிலையங்கள் என்பனவும் மூடப்பட்டிருந்தன.
பொதுமக்களின் கோபம் எல்லை மீறிச் சென்றதையடுத்து, விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டதுடன், கலவரத்தைத் தடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார மருத்துவர் அர்ச்சுனாவுடன் உரையாடி நிலைமையை சுமுகத்துக்குக் கொண்டுவந்தார்.
விசாரணைக்காக மருத்துவர் அர்ச்சுனா கொழும்புக்கு அழைக்கப்பட்ட நிலையில், அவர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மருத்துவமனையில் இருந்து வெளியேறினார். இரண்டு நாள்கள் அவகாசத்தின் அடிப்படையில் தான் கொழும்புக்குச் செல்வதாகவும், விசாரணைகளை முடித்துக்கொண்டு மீண்டும் மருத்துவமனைக்கு வருவதாகவும் தெரிவித்துவிட்டு உச்சக்கட்டப் பாதுகாப்





புக்கு மத்தியில் அவர் மருத்துவமனையில் இருந்து வெளியேறினார். (அ-ம-26-20)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 9
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாணிக்கவாசகரின் குருபூசையை முன்னிட்டுத் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-25-66)

## இன்றும் தொடர்கின்றது அரச ஊழியர்கள் போர்

யாழ்ப்பாணம், ஜூலை 9
அரச உத்தியோகத்தர்களுக்கு 25 ஆயிரம் ரூபா அதிகரிப்பைக்கோரி, நேற்று ஆரம்பிக்கப்பட்ட சுகவீன விடுப்புப் போராட்டம் இரண்டாம் நாளாக இன்றும் தொடர்கின்றது. வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கமும் இந்தப் போராட்டத்துக்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.
தற்போதைய அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுகளால் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் எமது சகல உத்தியோகத்தர்களுக்கும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பாரபட்சமின்றி வழங்கவேண்டும், சேவைக்குரிய அடிப்படைச் சம்பளத்தினைச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றியமைத்தல் வேண்டும், களவேலைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப் படியினைப் பத்தாயிரம் ரூபாவாக உயர்த்துதல் வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-66)

## அடிப்படை...

பிறப்பிக்குமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஐவரடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, விசாரணைகளின்றி முதல் சந்தர்ப்பத்திலேயே மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடியும் திகதி தொடர்பில் உயர்நீதிமன்றம் சட்டவியாக்கியானம் வழங்கும்வரை தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடைக்காலதடை உத்தரவுபிறப்பிக்குமாறுகோரி தொழில் முயற்சியாளர் சீ.டி.லெனாவா என்பவரால் குறித்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
மனுவானது இலங்கை அரசியல் களத்திலும் பேசுபொருளாக மாறியது. ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடும் நோக்கிலேயே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், இதன்பின்னணியில் அரசு உள்ளது எனவும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டின. மேற்படி மனுவுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகள் இடையீட்டு மனுக்களையும் தாக்கல் செய்திருந்தன. எனினும், இதன் பின்னணியில் அரசு உள்ளது என்ற குற்றச்சாட்டை ஆளுங்கட்சியினர் நிராகரித்தனர். ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும் என தான் உறுதியாக நம்புவதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இடைக்காலத் தடை உத்தரவு கோரும் மனு நேற்று ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-44)

## மக்கள்...

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விவகாரத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்திக்கும் வகையில் அமையும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை விவகாரம் தொடர்பில், சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ் ஆகியோருடான கலந்துரையாடலைத் தொடர்ந்தே அமைச்சர் டக்ளஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
விசாரணைக் குழு ஒன்றினை நியமித்து, மருத்துவமனையில் காணப்படும் குறைபாடுகள், அவை நீண்டகாலமாக நிவர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் மற்றும் மருத்துவர் அர்ச்சுனா தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு, அதனடிப்படையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-27-26-20)

## மருத்துவரை...

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் அர்ச்சுனாவை மருத்துவமனையில் இருந்து அகற்றுவதற்கு அதிகாரிகள் குடிதண்ணீர் விநியோகத்தை தடை செய்தனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
மருத்துவமனைக்கு முன்பாக பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமநேரத்தில், மருத்துவருடைய தங்குமிடத்துக்கு தண்ணீர் இணைப்புத் துண்டிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் மருத்துவர் தனது பேஸ்புக்கில் பதிவை மேற்கொண்டார். இது மக்களை மேலும் சீற்றமடைய வைத்ததுடன், மருத்துவருக்கு தண்ணீர் இணைப்பை உடனடியாக வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி, பொதுமக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, உடனடியாக தண்ணீர் விநியோகம் சீர் செய்யப்பட்டது. (அ-ம-26-20)

## மருத்துவ...

அர்ச்சுனாவை மாற்றக்கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர். நேற்றையதினம் மருத்துவர் அர்ச்சுனா கொழும்புக்கு அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், பணிகளுக்கும் திரும்பியிருந்தனர்.
வடக்கு மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரனவின் கட்டுப்பாட்டில் மருத்துவமனை இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-ம-66-26-20)

## சீனாவின்...

மகள் கடற்றொழிலாளர் கிராமிய கூட்டுறவு அமைப்பின் மூத்த உறுப்பினர் கனகசபை ரவீந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்பொழுது சீன வீட்டுத்திட்டம் தொடர்பில் கடற்றொழிலாளர்களாக நாம் ஆராய்ந்து வருகின்றோம். பொருத்து வீட்டுத் திட்டம் எமக்கு உகந்தது அல்ல. நாங்கள் கடற்கரையை அண்டித்தான் வாழ்ந்து வருகின்றோம். சூறாவளியால் பொருத்து வீடு அழியக்கூடும். இயற்கை அனர்த்தங்களுக்கு அஞ்சி வாழவேண்டிய சூழல் ஏற்படும். ஆகவே எங்களுக்குப் பொருத்தமற்ற இவ்வாறான வீட்டுத் திட்டங்களை முற்றிலும் நிராகரிக்கின்றோம்.
கடந்த காலங்களில் சீன அரசாங்கத்தால் அரிசி வழங்கபட்டதாகவும் அறிகின்றோம். கடற்றொழில் மக்களுக்கு முழுமையாக அது கிடைக்கப்பெறவில்லை. சிலர் இதில் இலாபம் அடைந்து கொண்டிருக்கின்றனர் - என்றார். (அ-ஒ-125)

## போராட்டத்தில்...

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இடம்பெற்றுவரும் மருத்துவ மோசடிகளுக்கு எதிராகவும், மருத்துவ மாபியாக்களுக்கு எதிராகவும் குரல்கொடுத்த மருத்துவர் அர்ச்சுனாவை மருத்துவமனையில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக பொதுமக்கள் நேற்று நூற்றுக் கணக்கில் திரண்டு போராட்டம் நடத்திய நிலையில், இந்தப் போராட்டத்தின் பக்க அம்சமாகவே, நோயாளர்கள் கிளினிக் அட்டைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-26-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுன ஆதரவு தராவிட்டால் அரசியலுக்கு தம்மிக்க முழுக்கு

கொழும்பு, ஜூலை 9

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தனக்கு ஆதரவு வழங்காவிட்டால் அரசியலில் இருந்து விலகுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா திட்டமிட்டுள்ளார் என அறியமுடிகின்றது. மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க தான் தயார் என அறிவித்து, அந்தக் கட்சியால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா நிறைவேற்றி வருகின்றார்.

தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும், ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு வழங்க வேண்டும் என மொட்டுக் கட்சியின் முக்கியமான உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதனால் ரணில் பக்கம் சாயும் நகர்வை மொட்டுக்கட்சி கடைபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையிலேயே தம்மிக்க பெரேரா, தனக்கு ஆதரவு வழங்கும் முடிவை மொட்டுக் கட்சி எடுக்காவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்குவதாக தனக்கு நெருக்கமானவர்களிடம் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

# சம்பள அதிகரிப்பாலேயே வரிச்சுமையும் உயர்கிறது!



## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

தொடர்ச்சியாக சம்பள அதிகரிப்புகள் காரணமாக மக்களின் வரிச் சுமை அதிகரித்துச் செல்கின்றது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியுமானால் நிச்சயமாக நாம் பெற்றுக்கொடுப்போம்.

மக்களின் வரிப்பணத்திலேயே சம்பளம் வழங்கப்படுகின்றது. தொடர்ச்சியாக சம்பள அதிகரிப்பை வழங்குவதன் ஊடாக மக்களின் வரிச்சுமை அதிகரித்துச் செல்கின்றது.

நாட்டின் வரிப்பணம் முழுவதனையும் சம்பளம் வழங்குவதற்கு செலவிடமுடியாது. வரிப்பணம் முழுவதனையும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு செலவிடுவதன் மூலம் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. தற்போதைய நிலையில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகள் அரசியல் பழிவாங்கல் செயற்பாடாகும் - என்றார். (எ-இ)

# மின் கட்டணம் விரைவில் 30 வீதத்தால் குறைகிறது



கொழும்பு, ஜூலை 9

மின்சாரக் கட்டணம் 30 வீதத்துக்கும் அதிகமாகக் குறைக்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் இந்த விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# தொழில்நுட்ப சிக்கலால் திரும்பி வந்த விமானம்

கொழும்பு, ஜூலை 9

தென்கொரியாவின் இன்சியான் சர்வதேச விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமொன்று தொழில்நுட்ப கோளாறு காரணமாக மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது என்று விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விமானம் நேற்றுமுன்தினம் மாலை 6.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தென்கொரியாவின் இன்சியான் விமான நிலையத்தை நோக்கிப் பயணித்துள்ள நிலையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சுமார் இரண்டு மணிநேர பயணத்தின் பின்னர், மீண்டும் இரவு 8.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது. இந்த விமானத்தில் 144 பயணிகளும் 15 பணியாளர்களும் இருந்துள்ளனர். (எ-இ)

# ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படாது

## சந்திரசேகரன் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

ஒக்ரோபர், செப்ரெம்பர் மாதங்களுக்கிடையே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணிலின் நரித்தனம் இனி எடுபடாது. மக்கள் இவ்வாறானவர்களின் பொய்க் கதையை நம்ப வேண்டாம். இரண்டு மாதங்களுக்கு முன்பு ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியின் பொதுச் செயலாளர் தேர்தலை ஒத்திவைப்பதாக முட்டி போட்டார். அது உடனேயே உடைந்துவிட்டது. தற்போது ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பாக உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்து ஒரு முட்டி போடப்பட்டுள்ளது. அதுவும் உடைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறுவார் - என்றார். (ப-20)

விசாக்கான Show money
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
1%
• visit visa
• student visa
• fixed & saving
• லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்.
தொடர்பு:- 075 033 6759

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும்
P.P.T. நிறுவனத்திற்கு முகாமையாளர், BUS Booking, பொதி அனுப்புதல்போன்ற வேலைகளுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். தங்கியிருந்து வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உரிமையாளர்: BS. யூட்
077 386 6250, 077 573 1318

# வெளிநாட்டுக் கப்பல் ஆய்வுக்கு தடைநீக்கம்



கொழும்பு, ஜூலை 9

வெளிநாட்டுக் கப்பல்களுக்கான தடை நீக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். அடுத்தாண்டு முதல் தடையை விலக்கிக்கொள்ள இலங்கை முடிவுசெய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஜப்பானுக்கு அலி சப்ரி விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், இலங்கைக்கு சோலர் வசதியுடன் கூடிய கப்பலை வழங்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

இதற்கு நன்றி தெரிவித்து அலி சப்ரி அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு நாடுகளுக்கு வெவ்வேறான விதிமுறைகளை இலங்கையால் பின்பற்றமுடியாது. அடுத்த நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைகளில் நாங்கள் தலையிடமாட்டோம். அடுத்தாண்டு ஜனவரி முதல் வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்கள் இலங்கை வந்து செல்ல தடைவிதிக்கப்படாது என அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## உத்தேச மின்கட்டணத் திருத்தம்:

# வாய்மூலக் கருத்துக் கோரல்கள் ஏற்கும் நடவடிக்கைகள் இன்று!

கொழும்பு, ஜூலை 9

2024ஆம் ஆண்டுக்கான இரண்டாம் உத்தேச மின் கட்டணத் திருத்தம் தொடர்பான மக்களின் வாய்மூலக் கருத்துக் கோரல்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளதாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-66)

செய்தி : 021 483 0606 - விளம்பரம் : 021-483 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org